**இலங்கை போக்குவரத்துச் சபையின் - 2017**

---

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

## 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) சொத்துக்களது நியாயபூர்வமான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியுடன் குறிப்பிடத்தக்க வேறுபாடு அடையுமிடத்து அறிவித்தல் வெளியிடப்பட வேண்டுமாயினும், நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீளப் பெறுமதியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டுமாயினும், கணக்கீட்டு நியமத்திற்கு முரணாக காணி மற்றும் கட்டிடங்களது மொத்தப் பெறுமதியையும் வெவ்வேறாக இனங்கண்டு கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) சபையானது பயன்படுத்த முடியாத பஸ் வண்டிகளது ரூபா 1,367,754,792 பெறுமதியையும் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தது.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் அர்த்தத்தை தெளிவுபடுத்தும் நலன்களுக்கான பொறுப்புகளை முன் கூட்டியே உணர்ந்து, அவற்றை அலகு விதி அடிப்படையில் கணிப்பிட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது ஊழியர்களது மாதாந்தச் சம்பளம் அல்லது அரை மாதச் சம்பளத்தை சேவைக் காலத்தால் பெருக்கி பணிக்கொடைக்கான நிதியேற்பாடு கணிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவனமானது கணனி மென் அணிகளை அருவச் சொத்துக்களாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை ஒன்றை இனங்கண்டிராததுடன், 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,510,486 பெறுமதியான மென் அணிகளுக்கு மீளாய்வாண்டிற்கென ரூபா 2,377,621 காலக்கழிவு நிதியேற்பாட்டைச் செய்திருக்கவில்லை.

### 2.2.3 தொங்கல் கணக்கு

சபரகமுவ பிரதேசத்தினதும் கொழும்பு பிரதேசத்தினதும் தொங்கற் கணக்கு மீதிகளான முறையே ரூபா 43,954 வரவு மற்றும் ரூபா 434,864 செலவு மீதி என்பவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | செயற்பாடற்ற கணக்குகள் - | | |
| | - வரவு | 9,935,459,128 | விரிவான பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் என்பன |
| | - செலவு | 26,054,954,882 | |
| (ii) | வர்த்தகக் கடன் கொடுத்தோர் | 3,042,220,390 | |
| (iii) | ஏனைய கடன் கொடுத்தோர் | 127,397,176 | |
| (iv) | காசாளர் நிலுவை மீதி | 34,388,213 | |
| (v) | நடத்துனர் மோசடி மீதி | 7,687,289 | |
| (vi) | நானாவித கடன் பட்டோர் | 111,795,741 | |
| (vii) | பெற வேண்டிய வருமானம் | 243,166,958 | |
| (viii) | வர்த்தகக் கடன் பட்டோர் மீதி | 7,972,076 | |
| (ix) | கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (SLTB) | 607,284,153 | |
| (x) | கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (மத்திய வங்கி) 2017 ஆம் ஆண்டிற்கு முற்பட்டவை | 1,680,688,187 | பட்டோலை, காலப்பகுப்பாய்வு,மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் என்பன |
| (xi) | கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (மத்திய வங்கி) 2017 | 171,828,031 | |
| (xii) | கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (மத்திய வங்கி) | 40,459,519 | |
| (xiii) | கொள்வனவுக்கான முற்பணம் (சோகம) | 101,641,771 | |
| (xiv) | காணி விற்பனையால் பெற்ற முற்பணம் | 1,000,000,000 | விற்பனை செய்த காணி மற்றும் பெறுமதி தொடர்பான பட்டோலை |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பு அலுவலகக் கடை வாடகை வருமான நிலுவையாக ரூபா 1,863,414 தொகையானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வருவதுடன், அதனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வட மேல் பிரதேச அலவ்வை டிப்போவில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் தீவிரவாதத் தாக்குதல்களினால் மரணமடைந்த ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்திற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,174,752 மீதி நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அம்மீதி தீர்வு செய்யப்படாமலுமிருந்தது.

(இ) பெற வேண்டிய வருமான மீதியில் சபரகமுவ பிரதேசத்தின் இராணுவப் போக்குவரத்து, பொலிஸ் அனுமதிப்பத்திரம் மற்றும் இராணுவ அனுமதிப்பத்திரம் என்பவற்றின் பொருட்டு 5 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 15,110,583 கூட்டுத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டிறகு முன்பிருந்தே ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையாக பங்களிப்புத் தொகையை வழங்காததன் காரணமாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,680,688,187 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாக இருந்ததுடன், அத்தொகையைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(உ) களுத்துறை சாரதிகள் பயிற்சிப் பாடசாலையிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 12,305,959 ஆகும். இது 3 ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும், தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஊ) கண்டி தெற்கு டிப்போவில் ரூபா 4,737,950, பாணந்துறை டிப்போவில் ரூபா 23,546,483, மத்துகம டிப்போவில் ரூபா 26,952,578, அலுத்கம டிப்போவில் ரூபா 6,179,118 எனக் கடன் கொடுத்தோர் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்படத் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை இன்றியிருந்தன.

(எ) 2014, 2015 ஆம் ஆண்டுகளில் வாடகைக் கொள்வனவு அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 2200 பஸ் வண்டிகளின் பொருட்டு கொடுப்பனவுத் தவணைப் பணமாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,726,713,973 கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. இதன் பொருட்டு ரூபா 6,692,000,000 டிப்போக்களிலிருந்து வந்தடைய வேண்டுமாயினும், அதனைப் பெற்று, வாடகைக் கொடுப்பனவுத் தவணைப் பணத்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஏ) தீர்வு செய்யப்படாத ரூபா 1,565,050,215 கூட்டுத் தொகையுடைய கொள்வனவு முற்பண மீதியில், 58 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 914,763,169 ஒன்று முதல் 03 ஆண்டுகளாகவும் 30 சதவீதமான ரூபா 479,811,048 மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவும் தீர்வு செய்யப்படாதிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 177 | பதுளை டிப்போவில் காசு குறைவாக வங்கியிலிடப்பட்டமையால் 2012 தொடக்கம் அதிகரித்தவாறிருக்கும் ரூபா 34,249,522 மீதியிருந்ததுடன், அது தொடர்பாக குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் டிப்போ நடவடிக்கை எடுத்திருக்கவுமில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>---------------------------------------------------------<br>1.16 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குகையில் அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், சபையானது இச்சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கியிருந்தது. |
| (இ) 2009 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>---------------------------------------------------------<br>8.3.9 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் போக்குவரத்து மற்றும் சிவில் வான் சேவைகள் பிரதி அமைச்சினது அலுவலகத்திற்கும் ஜாதிக சேவக சங்கத்திற்கும் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு 2017 ஆம் ஆண்டிற்கென முறையே 390 லீட்டர் மற்றும் 1667 லீட்டர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், இச்சுற்றறிக்கைக்கு முரணாக இரு நடத்துனர்களும் ஒரு சாரதியும் ஒரு பாதுகாப்புக் காவலரும் சம்பளம் மீளளிக்கப்படும் அடிப்படையில் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவு மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்பீ 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பன | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்களுக்கு படி வழங்கப்படலாகாது. எவ்வாறாயினும், சபையின் தலைமை அலுவலகத்தில் மாத்திரம் 19 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டில் விசேட படியாக ரூபா 1,900,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>(ii) சுற்றறிக்கைப் பிரகாரம் திறைசேரியின் அனுமதியின்றி, டிப்போக்களது செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு டிப்போ முகாமையாளர், உதவி முகாமையாளர், போக்குவரத்து மற்றும் பொறியியல் உத்தியோகத்தர் ஆகியோருக்கு மாதாந்தம் ஆகக்கூடிய தொகையாக ரூபா 100,000 ஊக்குவிப்புப் படி வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,616,709,589 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 632,619,173 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின்போது மிகையானது ரூபா 2,249,328,762 அதிகரித்திருந்தது. சபையின் வருமானம் ரூபா 3,667,752,180 அதிகரித்தமையும் நிதிசார் வருமானம் ரூபா 23,762,795 அதிகரித்தமையும் உற்பத்தி நட்டம் ரூபா 61,889,455 குறைவடைந்தமையும் மேற்படி அதிகரிப்புக்கான முக்கிய காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யின், 2013 முதல் 2016 வரை சபையின் பற்றாக்குறை கிரமமாகக் குறைவடைந்திருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் மிகை அவதானிக்கப்பட்டது. ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளுமதிடத்து சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,709,377,743 பங்களிப்பானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 20,231,073,915 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ.்.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்தின்போது நோக்கங்களையும் இலக்குகளையும் அடையக்கூடியவாறு முகாமைத்துவத்தின் பொறுப்பு தெளிவாக இனங்காணப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கருத்திற் கொள்ளாது அடைய முடியாத நோக்கங்களையும் இலக்குகளையும் உள்ளடக்கியிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நிதி நெருக்கடிக்களுக்குத் தீர்வாக 2015 ஆம் ஆண்டின் போது சிவில் விமான சேவைகள் அமைச்சினதும் பொதுத் திறைசேரியினதும் வழிகாட்டலின் கீழ் மீள வியூகப்படுத்தல் திட்டமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் சபையை ஓரளவு நிலையான நிலைமைக்குக் கொண்டு வந்து வினைத்திறனுடனும் பயனுள்ளதுமான சேவையாக அதனை மாற்றமடையச் செய்து பொதுமக்களுக்கும் பணிபுரியும் ஊழியர்களுக்கும் சிறந்த எதிர்காலம் மற்றும் தரமான சேவையை வழங்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய, சபையில் பல்வேறு முன்மொழிதல்களை அமுலாக்குவதற்கு எதிர்பார்த்தபோதும், 3747 ஊழியர்கள் தமது விருப்பின் பேரில் ஓய்வு பெற்றது மாத்திரமே நடைபெற்று இழப்பீடாக ரூபா 7,580,000 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மனிதவள முகாமைத்துவப் பிரிவு சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள சாரதிகள், நடத்துனர்கள் என்போர் தமது விருப்பின் பேரில் ஓய்வு பெறுவார்களாயின் அவர்கள் முன்னர் வகித்த பதவிகளுக்கு மீண்டும் விடுவிக்கப்படலாமாயினும், அதற்கு முரணாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருத்தமற்ற பணிகளில் ஈடுபட்டிருந்த 328 சாரதிகளும் 674 நடத்துனர்களும் என 1002 பேர பணியிலமர்த்தப்பட்டிருந்ததுடன், 1489 சாரதிகளும் நடத்துனர்களு் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுமிருந்தனர்.

(ஆ) சபையின் டிப்போக்களுக்கும் பிரதேச வேலைத்தளங்களுக்கும் தேவையான உதிரிப்பாகங்கள் தனியார் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதி அரை ஆண்டின்போது தனியார் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்ட ரூபா 6,115,908 பெறுமதியான உதிரிப்பாகங்கள் மாதிரி வடிவங்களுக்கமைய அமையாததால் நிராகரிக்கப்பட்டு பிரதான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வுக்குள்ளான கட்டணம் அமுலாகும்போது, குறித்த வரியுடன் தொடர்புடையவர்கள் சகல வரி நிலுவைகளையும் உடன்படிக்கைப் பிரகாரம் சபைக்குச் செலுத்த வேண்டுமாயினும், அவ்வாறு அறவிடாது 2018 மே 28 ஆந் திகதியளவில் 45 நாட்களுக்கான குத்தகை வாடகை, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் என முறையே ரூபா 1,035,000, ரூபா 85,858 மற்றும் ரூபா 235,666 என நிலுவைகள் நிலவியதுடன், அதற்கமைய குறித்த மீளாய்வுக் கட்டணம் அமுலாகியபோதும், நிலுவைத் தொகையைப் பெறுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதியன்று தனியார் கம்பனி ஒன்றிலிருந்து தலைமை அலுவலகம் கொள்வனவு செய்த ரூபா 700,350 பெறுமதியான உதிரிப்பாகங்களைப் பிரதான களஞ்சியத்தில் பெறும்போது அவை பாவனைக்குத் தகுந்ததென தலைமை அலுவலகத்தின் பரிசீலனைப் பொறியியலாளர் சான்றுறுதிப்படுத்தியதையடுத்து கம்பஹா பிரதேச வேலைத்தளத்தில் அவை ஒப்படைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2018 சனவரி 11 ஆந் திகதியன்று பிரதேச வேலைத்தளப் பொறியியலாளர் உதிரிப்பாகங்கள் மிகவும் தரமற்றவை எனச் சான்றுறுதிப்படுத்தி ரூபா 408,950 பெறுமதியான உதிரிப்பாகங்களை மீண்டும் பிரதான களஞ்சியத்திற்கு அனுப்பியமை கணக்காய்வில கேள்விக்குரியதாகியது.

(உ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகப் பாதுகாப்பு பிரிவில் 06 சுடுகலன்களும் 12 ஆம் இலக்கத்தையுடைய 63 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்களும் 16 ஆம் இலக்கத்தையுடைய 08 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்களும் நேரடியாகப் பரிசீலிப்பதற்கிருந்தன. அவற்றினது விபரம் பதிவு செய்யப்பட்டிராததுடன், 2018 ஒப்டோபர் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், முன்னாள் பாதுகாப்புப் பரிசோதனை உத்தியோகத்தரால் பொருட்களும் ஆவணங்களும் தற்போதைய பாதுகாப்புப் பரிசோதனை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும் 06 சுடுகலன்கள் அவற்றில் உள்ளடங்கவில்லை. மேலும், அக்கடிதத்தில் 70 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், நேரடியாகவே பரிசீலிப்பதற்கிருந்த பயன்படுத்தக்கூடிய தோட்டாக்களது எண்ணிக்கை 71 ஆகும். அதில் 16 ஆம் இலக்க, பயன்படுத்தக் கூடிய தோட்டாக்கள் 08 இருந்ததுடன், ஒன்றில் கெப் இல்லாதுமிருந்தது. மேலும், முப்பது 12 ஆம் இலக்க வெற்று மூடிகளும் ஒப்படைக்கப்பட்டதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் அவை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு நோக்கங்களுக்காக 2017 ஆம் ஆண்டின்போது முறையான அங்கீகாரமின்றி தலைமை அலுவலகம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,058,596,564 கூட்டுத் தொகையுடைய 21 நடைமுறைக் கணக்குகளைப் பேணியிருந்ததுடன், அந்நோக்கங்களைக் கருத்திற் கொள்ளாது கணக்குகளுக்கிடையே காசு

மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தபோதும், அவ்வாறு மாற்றத்திற்குள்ளான காசு மீண்டும் குறித்த கணக்குகளை வந்தடையவில்லை. இவ்வாறாக பெருமளவு எண்ணிக்கையிலான கணக்குகளைப் பேணுவதன் மூலம் சபையின் நிதி நடவடிக்கைகள் சிக்கலுக்குள்ளாகியிருந்ததுடன் அதன் காரணமாக நிதிக் கட்டுப்பாடு நலிவடைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(எ) சபையிடம் 21 வாகனங்கள் இருந்ததுடன், கணக்காய்வுத் தினத்திலும் சகல வாகனங்களது மைலோ மீட்டர்கள் செயலற்றிருந்தன.

(ஏ) ஒரு பக்கத்தில் 10 டிக்கட்டுக்கள் வீதம் 100 டிக்கட்டுக்களைக் கொண்ட 19950 புத்தகங்கள் தொடர் இலக்கங்கள் இன்றி அச்சிடப்பட்டு 9750 புத்தகங்கள் பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 6,333 புத்தகங்கள் மாத்திரம் களஞ்சியத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு இலக்கமின்றி புத்தகங்களை அச்சிடுவது சம்பந்தமாக சபை விசாரணைகளை மேற்கொண்டு அந்த அறிக்கையை 2017 செப்டெம்பர் 14 ஆந் திகதியன்று ஸ்ரீலங்கம்/ஆ/12/2017 பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரின் மூலமாக சபையின் தலைவருக்குச் சமர்ப்பித்திருந்தது. 2017 நவம்பர் 15 ஆந் திகதியன்று இது சம்பந்தமாக பிரதான தயாரிப்பு உத்தியோகத்தருக்கு குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டபோதும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய கணக்காய்வுத் தினத்தன்றும் குறித்த பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மத்திய பஸ் தரிப்பு அலுவலகத்தில உள்ள கடைகளின் பொருட்டு ஏ1167/67 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 05 ஆம், 14 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம், எல்எச் 32 மற்றும் எல்எச் 34 எனும் கடைகளுக்கும் கழிவறைகளுக்கும் வாடகை மற்றும் நீர் மின்சாரக் கட்டணம் என்பன குத்தகையாளர்களால் செலுத்தப்படாததால் குத்தகை உடன்படிக்கை மீறப்பட்டுள்ளபோதும், குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே, இதனை குறித்த நேரத்தில் குறித்தவாறு அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மத்திய பஸ் தரிப்பிடத்தில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு கெமரா முறைமை 16 கெமராக்களைக் கொண்டது. எனினும், கெமரா மூலம் பெறப்படும் காட்சிகள் தெளிவற்று இருந்ததாலும், அவற்றைப் பின்னர் விசாரணைகளின் பொருட்டுப் பெற முடியாதிருந்தமையும், சகல முக்கிய இடங்களையும் உள்ளடக்காதும் இருந்தமையால் கெமரா முறைமையைப் பொருத்தியமையால் ஏற்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுளை டிப்போவில் நாளாந்தம் ஏறக்குறைய 115 பஸ் வண்டிகள் பாவனையில் ஈடுபடுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், குறித்த நேரத்தில் தடாக சேவையும் கிறிஸ் சேவையும் மேற்கொள்ளப்படாமையும் கிறீஸ் செலுத்தும் இயந்திரம் தொடர்ந்து பழுதடைதல் கிறீஸ் தேவைத் தாமதத்துக்கு காரணமாக அமைந்தது. கிறீஸ் சேவை முறையாக குறித்த நேரத்தில் நடைபெறாமையால் பஸ் வண்டிகளது என்ஜின் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளாவதுடன், மீண்டும் உதிரிப் பாகங்களைப் பொருத்தி பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளது. குறித்த நேரத்தில் தேவையான கிறீஸ் சேவை மற்றும் தடாக வேலை என்பன நடாத்தப்படுவதன் மூலம் பஸ் வண்டிகளை குறைந்த கிரயத்தில் வினைத்திறனுடன் நெடுங்காலம் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) பதுளை டிப்போவில் 03 நிலத்தடி எரிபொருள் தாங்கிகள் இருப்பதுடன், அம்மூன்று தாங்கிகளையும் நேரடியாக பரிசோதித்தபோது அதில் ஒரு தாங்கியில் எரிபொருள் முற்றாக நிரம்பியிருந்தமையும் ஏனைய 02 தாங்கிகளும் பகுதியளவிலேயே நிரம்பியிருந்தமையும் தெரிய வந்தது. நிறைந்திருந்த தாங்கியில் இருந்த எண்ணெயை அறவிடுவதற்கான அளவுகோல் போதுமானதாக இல்லாதிருந்தமையால் உள்ளவாறு உள்ள அளவை கணிப்பிட முடியவில்லை. அதன் காரணமாக, 03 தாங்கிகளிலும் உள்ளவாறிந்த எண்ணெயின் அளவைக் கணிப்பிட முடியவில்லை. அவ்வாறே, தாங்கிகளில் எண்ணெய் நிரம்பி இருக்கையில் அளவிடுவதற்கு இயலுமானவாறு விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. மேலும், எரிபொருளுக்கான கட்டளையை வழங்குகையில் மீண்டும் கட்டளையை சமர்ப்பிக்கும் மட்டம், குறைந்த கையிருப்பு மட்டம், பாதுகாப்புக் கையிருப்பு மட்டம் என்பவற்றின் பொருட்டு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எரிபொருள் குறைவும் மிகையும் பெருமளவு காணப்பட்டதுடன், மிகைக் கணக்கின் மீதியாகிய ரூபா 33,962,408 ஏனைய வருமானமாக இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டமை போலியான இலாபத்தைக் காட்டியமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தில் இலங்கை வங்கி இயங்கும் இடத்திற்கு முன்பாக 2500 சதுர அடிக்கு மேற்பட்ட இடத்தை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் எழுதுகருவி வகைப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவதுடன், அவ்விடத்தை வேறு அலுவலகங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நலனை சபை இழந்திருந்ததுடன், ஏறக்குறைய 3 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுமிருந்தது.

(ஆ) டாட்டா பஸ்களைப் பயன்படுத்துவது நீக்கப்பட்டு ஹினோ டர்போ பஸ் வண்டிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 117,978 பெறுமதியான 27 பொருட்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 யூலை 03 ஆந் திகதியன்று சபையின் பிரதான களஞ்சியம் பரிசோதனை செய்யப்பட்டபோது, களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்பட்ட டிக்கட் இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் 30,000 தர்மல் கடுதாதி சுருள்கள் தெரிவுச் செவ்வைக்குள்ளாகின. அப்போது அவை மாதிரி வடிவமைக்கேற்ப இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தினத்திற்கு முன்பு களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்பட்டு களஞ்சியத்தில் இருந்த டிக்கட் சுருள்களும் தெரிவுச் செவ்வைக்குள்ளாகின. அவையும் மாதிரி வடிவமைப்புக்கேற்ப இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2017 யூலை 12 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் பெறப்பட்ட 1,623,800 டிக்கட் சுருள்கள் நீளத்தில் குறைந்தவையா என்பதைக் கணக்காய்வில் உணர முடியாதிருந்ததுடன், அதற்கமைய சபைக்கு ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய ரூபா 9,711,268 ஆகும். ரூபா 7,888,000 க்கான செயலாற்றல் பிணை முறி 2017 யூலை 14 ஆந் திகதியளவில் காலாவதியாகியிருந்தபோதும், சபையானது அச்செயலாற்றல் பிணை முறியை நீடிக்காது டிக்கட் சுருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. இது தொடர்பாக 2017 யூலை 13 ஆந் திகதியன்றும் ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்றும் கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டபோதும்,

கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு அச்சந்தர்ப்பத்தில் மாதிரி வடிவத்திற்கு ஒவ்வாத டிக்கட் சுருள்கள் வழங்கப்பட்டிருந்தமையை சபையும் வழங்குநருடன் ஏற்றுக்கொண்டிருந்ததுடன் சபையின் தலைவரது ஸ்ரீலங்கம/பிர.ச.க/பொது/01/2017 ஆம் இலக்கமுடைய 2017 செப்டெம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(i) சபைக்கு ஏற்பட்ட இழப்பு சம்பந்தமாக பூரணமானதும் முறைமையானதுமான பரிசீலனை மேற்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் அப்பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பரிசீலனை நடவடிக்கைகள் முடியும் வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி ரூபா 1,021,050, 2018 சனவரி 08 ஆந் திகதி ரூபா 2,382,450 என கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) செயலாற்றல் பிணை முறியின் காலம் 2017 யூன் 14 ஆந் திகதி முடிவடைந்தமையால், 2017 ஆம் ஆண்டில் வழங்குனர் சமர்ப்பித்த கேள்வி வைப்பாகிய ரூபா 1,000,000 வருமானத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அது 2017 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்று வழங்குநருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்குச் சபையின் தலைவரது அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதியன்று சட்டத்துறை உத்தியோகத்தரினூடாக அக்கேள்வி வைப்பை சபை அறவிடுவதற்கான வாய்ப்புண்டு எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், சபை அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் குறித்தவாறு பங்களிப்புத் தொகையைச் செலுத்தாமையால் மீளாய்வாண்டின்போது 4 பிரதேச அலுவலகங்களுடன் தொடர்புடையதாக ரூபா 712,069,120 தண்டப் பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,348,905 மீதியானது கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுமிருந்தது.

### 4.6 பதவியணி நிர்வாகம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்திக்கு அனுசரணையாக சபைக்கான அமைப்பு அட்டவணை, ஆட்சேர்ப்பு நடைமுறை, பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு இலங்கை போக்குவரத்துச் சபை தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயலாற்றுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.1.1 பொருட் கொள்வனவு

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபை பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், 4.2.1(ஆ) க்கமைய குறைந்தளவு 3 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிரல்படுத்த வேண்டுமாயினும், சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் அவ்வாறாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதன பொருட் கொள்வனவு**

2016 ஆம் ஆண்டின்போது ஊழியர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னர் சபையை மீள வியூகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதன் ஒரு கட்டமாக 21 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 11 பிரதேச வேலைத்தளங்கள் என்பவற்றை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ஊழியர்கள் ஓய்வு பெறுவதால் இயந்திர சாதனங்களை அதிகரிப்பதும் வினைத்திறனை அதிகரிப்பதுமான நோக்குடன் மற்றும் பழுதுபார்த்தல்களை வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும் இந்த இயந்திர சாதனங்களையும் சிறு கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கான முன்மொழிதலும் செயற்திட்டத்தின் பொருட்டு ரூபா 320,548,000 கிரயத்தில் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெறப்படாதிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பஸ் வண்டிகளது இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்குத் தேவையான சிறு கருவிகளையும் இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்குச் சபை தீர்மானித்திருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் குறித்த பொருட் கொள்வனவு உள்ளடக்கப்பட்டிராததுடன், வருடாந்த வரவு, செலவுத் திட்டத்திலும் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்கான முன்மொழிவுகளில், செயற்திட்டத்தின் நோக்கம், செயற்திட்டக் காலவரை செயற்திட்டத்திற்கான திட்டம், நிதியைப் பெறும் விதம், வழங்கு பொருட்களைப் பெறும் ஆற்றல் என்னும் விடயங்கள் விபரிக்கப்படவில்லை.

(iii) 2017 சனவரி 02 ஆந் திகதிய செயற்திட்ட முன்மொழிவுடன் அதற்கான கிரய மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அக்கிரய மதிப்பீட்டில் உள்ளடங்காத ரூபா 33,434,426 பெறுமதியான 12 இயந்திர சாதனங்களுக்கான பொருட் கொள்வனவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) சிறு கருவிளையும் இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 5.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தில் கடனுக்குப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்களது விபரம் மற்றும் கேள்வி

ஆவணங்களைப் பெறுவதற்கு மீளப் பெறமுடியாத ரூபா 12,500 சபைக்குச் செலுத்தப்பட வேண்டும் எனும் தகவல்களும் உள்ளடக்கப்படாமையால் சபை எதிர்பார்த்தவாறு போட்டியின் மூலம் சிறந்த வழங்குநரைத் தெரிவு செய்யும் நோக்கம் நிறைவேறாமை அவதானிக்கப்பட்டது.

(v) சபையானது 5 தொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட்களை கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்திருந்ததுடன், அதற்கான பெருமளவு வழங்குனர்கள் இன்மையால் கூறுவிலைக் கோரல் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் அல்லது தொலைபேசி பெயர்ப்பட்டியலின் மஞ்சள் பக்கங்களில் குறிப்பிடப்படும் வழங்குனர்களைத் தெரிவு செய்து கூறு விலைகளைப் பெறும் வாய்ப்பு இருந்தபோதும், இக்கொள்வனவிற்கு மேலே குறிப்பிடப்பட்ட சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதனக் கொள்வனவு புதினப் பத்திரிகை விளம்பரத்தின் கீழ் கூறு விலைகளைக் கோரியமையால் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரமே கூறு விலை பெறப்பட்டிருந்தது.

(vi) சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதன பொருட் கொள்வனவு நிரலில் 5 தொன் எடையுள்ள ஒரு போர்க் லிப்டினது கிரயம் ரூபா 1,500,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், வழங்குனர் நிறுவனம் சமர்ப்பித்தது ரூபா 7,200,000 (பெறுமதிசேர் வரி நீங்கலாக) ஆகையால் 38 சதவீதமான ரூபா 5,700,000 வேறுபாடு இருக்கையில், தொழில்நுட்ப மதிப்பாய்வுக்கு அது தொடர்பாகவோ சந்தைப் பெறுமதியையோ கருத்திற் கொள்ளாது கொள்வனவுக்கான பரிந்துரையை வழங்கியிருந்தது.

(vii) சபைக்குத் தேவையாக இருந்தது 5 தொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட் கொள்வனவே ஆயினும், ரூபா 7,200,000 பெறுமதியில் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) 5 தொன் எடையுள்ள ஒரு இயந்திரமும் 2.5 டொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட் இயந்திரங்களும் ஏற்பாடு செய்யப்பட்ட பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்கள் கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 28 ஆந்திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(viii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பந்தி மற்றும் மேலதிகம் 33 என்பவற்றிலுள்ள திருத்தம் செய்யப்பட்ட வரம்புகளின் பிரகாரம் கூறுவிலைக் கோரல் அடிப்படையில் குறைந்தது முத்திரை பொறிக்கப்பட்ட மூன்று கூறுவிலைகளையேனும் பெற்று அதில் ஒரு வழங்குனரைத் தெரிவு செய்ய வேண்டுமாயினும், அதற்கு முரணாக கொள்வனவு செய்கையில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து இயந்திரம் ரூபா 419,750 பெறுமதியான Air Compressor ஒன்றைக் கொள்வனவு செய்கையில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பொருட் கட்டளை எதுவுமின்றி பொருட் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொருளானது களஞ்சியத்தை வந்தடைந்து 14 நாட்களின் பின்னர் பொருள் பெறப்பட்டதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தது.

(ix) பிரத்தியேக கம்பனி ஒன்றினால் வழங்கப்பட்ட ரூபா 850,815 பெறுமதியான Feeler Gauge, Torque Wrench and Horning Heads எனும் 03 பொருட்களின் 13 கூறுகள் பழுதுபட்டனவாதலால் அவை நிராகரிக்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதியளவிலும் அவை களஞ்சியத்தில் இருந்ததுடன் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமலுமிருந்தது.

(x) 2018 பெப்ரவரி 06 ஆந் திகதியளவில் மால்போ டிரேடிங் பிறைவேட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,190,662 பெறுமதியான 3 பொருட்கள் சபையின் மாதிரி வடிவத்திற்கு ஒத்ததாக உள்ளதா என்பதைப் பரிசீலித்திருக்கவில்லை.

**(இ) பஸ் வண்டிகளது என்ஜின்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல் தொடர்பான பொருட் கொள்வனவுக் கணக்காய்வு**

---

(i) ஒவ்வொன்றும் ரூபா 2,383,089 வீதம் 326 பஸ் வண்டி என்ஜின்களும் ஒவ்வொன்றும் ரூபா 2,381,044 வீதம் 163 பஸ் வண்டி என்ஜின்களும் என ரூபா 1,164,997,186 பெறுமதியான 489 என்ஜின்களைச் சபை அமைச்சிடமிருந்து பெற்றிருந்தது. குறித்த பிரதேசங்களில் புதிய என்ஜின்களைப் பொருத்த வேண்டியதாக உள்ள பஸ் வண்டிகளது தகவல்களைச் சபை கோரியிருந்ததுடன், குறித்த பிரதேச பொறியியலாளர்களினால் என்ஜின் பொருத்தப்பட வெண்டிய நிரல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தது. அவ்வாறாக 01 ஆம் கட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டவாறு பஸ் வண்டிகளில் என்ஜின் பொருத்தப்பட்டிராத 172சந்தர்ப்பங்கள் நிலவின.

(ii) புதிய என்ஜின்களைப் பொருத்துவதற்கென கழற்றப்பட்ட 124 என்ஜின்கள் பழுதுபார்த்தலின்றி பஸ் வண்டிகளில் பொருத்தப்படக் கூடிய நல்ல நிலைமையில் இருந்தன. 83 என்ஜின்கள் டிப்போ மட்டத்தில் பழுதுபார்க்கப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், பிரதேச வேலைத் தளங்களுக்கும் ஜெர்மன் தொழில்நுட்ப பாடசாலையில் பழுதுபார்க்கப்பட்டும் 86 என்ஜின்கள் கணக்காய்வுத் தினம் வரை டிப்போக்களை சென்றடையாதிருந்தன.

**(ஈ) அச்சிடல் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்**

---

(i) சபையின் தலைமை அலுவலகத்தில் போக்குவரத்துப் பிரிவுக்கென ரூபா 397,000 பெறுமதியான பயண அனுமதிச்சீட்டுக்களை அச்சிடும் இயந்திரம் ஒன்று 2017 பெப்ரவரி 24 ஆந் திகதி தனியார் கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் ஈடுபட்டிராததுடன், அப்பொருட்கள் களஞ்சியத்தை வந்தடைந்ததன் பின்னர் அவற்றின் மாதிரி வடிவங்களும் செயற்பாடும் தொடர்பாக பரிசீலிக்காது அவை பொறுப்பேற்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றைச் செயற்படுத்துகையில் குறைபாடுகள் தென்பட்டதால் குறித்த நிறுவனத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், முறையான உடன்படிக்கை இன்மையால் குறித்த இழப்பை சபை பெற முடியாது போனது

(ii) 2017 ஒக்டோபர் 24 ஆந்திகதியன்று மீண்டும் 02 அச்சிடல் இயந்திரங்களுக்கான கூறு விலைகளைச் சபை கோரியிருந்தது. பொருட் கொள்வனவுத் தீர்மானமின்றி நிராகரிக்கப்பட்ட மேற்படி நிறுவனத்திடமிருந்தே 02 அடையாள அட்டைகளை அச்சிடும் இயந்திரம் ரூபா 2,550,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் பொருட் கொள்வனவுத் திட்டமொன்று செயற்படாமை காரணமாக பஸ் வண்டிகளைப் பழுதுபார்ப்பதற்கான உதிரிப் பாகங்கள் பஞ்சிகாவத்தையில் உள்ள விற்பனை நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக, குறித்த நேரத்தில் குறித்த நியமப்படியும் தரத்துடனும் உதிரிப் பாகங்களை நியாயமான விலையில் பெற முடியாதிருந்தது.

(ஊ) பரிசீலனைக் குழுவால் ரூபா 7,890,664 பெறுமதியான உதிர்ப் பாகங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் குறித்த மாதிரி வடிவங்களுக்கேற்ப பொருந்தி வராதுள்ளதாக இன்வொய்சு பத்திரங்களில் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உதிரிப் பாகங்கள் 2017 ஒக்டோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைப் பொருட் கொள்வனவுக் குழுவால் கொள்வனவு செய்யப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த உதிரிப்பாகங்கள் டிப்போக்களுக்கும் பிரதேச வேலைத் தளங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

## 6.2 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பு ஒப்படைப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் போதியளவு களஞ்சிய வசதிகள் இருக்காததுடன், களஞ்சியப் பொறுப்பாளர் மிகவும் குறுகிய இடத்தில் தனது கடமைகளில் ஈடுபட்டவாறுமிருந்தார். கடமையில் ஈடுபடுவதற்குப் போதுமான வசதிகள் இருக்கவில்லை.

(ஆ) சகல வாகனங்களுக்குமான சேவை டிப்போக்களில் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பொருட்டு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலமும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் குறிப்பிடப்பட்டிருந்தும், சபையின் 107 டிப்போக்களில் 09 டிப்போக்கள் மாத்திரமே இவ்வனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தன.

(இ) மத்திய பஸ் வண்டி அலுவலகம் நிலத்தடி நீர்த் தாங்கியைக் கொண்டிருந்ததுடன், அத்தாங்கி திறக்கப்பட்டவுடன் கரப்பான் பூச்சிகளும் வேறு பூச்சிகளும் 2018 யூன் 05 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது காணப்பட்டதுடன், நீர்த்தாங்கியின் அருகே குளவிக் கூடுகளும் தென்பட்டன. அதற்கமைய, மத்திய பஸ் வண்டிச் சுற்றாடலில் பயன்படுத்தப்படும் நீரின் சுத்தம் பிரச்சினைக்குரியதாக விளங்கியது. அவ்வாறே, நீர்த்தாங்கியின் அருகே உள்ள கடைக்குச் சொந்தமான நீர்ப் போத்தல்களும் குடிபானப் போத்தல்களும் தாங்கிகளில் வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம், பாதீடு செய்யப்பட்ட வருமான, செலவினக் கூற்று, பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றிற்கு அனுசரணையாக பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவின அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | | அவதானிப்புகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | சபையினது பஸ் வண்டிகளின் விபரம் அடங்கிய பதிவேடொன்று பேணப்படாமை. |
| | | (ii) | சபைக்குரிய காணிகள் தொடர்பான பதிவேடு பேணப்படாமை. |
| | | (iii) | சொத்துக்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்படாமை |
| | | (iv) | சொத்துக் கொள்வனவு மற்றும் கணக்கீடு என்பவற்றினது உள்ளகக் கட்டுப்பாட்டில் நலிவு உள்ளமை |
| | | (v) | சொத்துக்கள் வருடாந்ம் சரி, பிழை பார்க்கப்படாமை. |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை | | பெற வேண்டிய தொகையைத் துரிதமாக அறவிடவும் கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றைக் கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | முற்பணத் தீர்வு | (i) | முற்பணப் பதிவேடு பேணப்படாமை. |
| | | (ii) | பெறப்பட்ட முற்பணம் பணி நிறைந்தவுடனேயே தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | | (iii) | பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படாமை. |
| | | (iv) | காலத்துக்குக் காலம் இணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்யப்படாமை. |
| (ஈ) | ஊழியர் பிணை வைப்புகள் | | ஊழியர் பிணை வைப்புக்களுக்கான பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியரின் பிணை வைப்பு சபையின் செலவுக்குப் பயன்படுத்தப்படுதல். |
| (உ) | வங்கிக் கணக்கு | | நிதிப் பிரிவு அவசியமின்றி வங்கிக் கணக்குகளைப் பேணுதல், கணக்கிணக்கம் செய்யாமை, சீராக்கல் செய்யாமை என்பன |
| (ஊ) | பயண அனுமதிச் சீட்டு வருமானம் | | பயண அனுமதிச் சீட்டு வருமானத்தைச் சேகரிப்பதற்கு தொடர் இலக்கத்துடன் கூடிய அச்சிட்ட இன்வொய்சுகளைப் பயன்படுத்தாமை |

| | | | |
|---|---|---|---|
| (எ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | களஞ்சியத்தில் பெறப்படும் பொருள் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் மேற்பார்வையிடப்படாமை. |
| | | (ii) | நெடுங்காலமாகப் பயன்படுத்த முடியாதுள்ள பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | உதிரிப் பாகங்கள் மத்திய களஞ்சியத்தினூடாக டிப்போக்களுக்கு வழங்கப்படாமை |
| | | (iv) | களஞ்சியத் தரவுகளும் டிப்போவின் தரவுகளும் கணக்கிணக்கம் செய்யப்படாமை. |
| (ஏ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | சகல வாகனங்களுக்கும் சம்பவப் பதிவேடு பேணப்படாமை. |
| | | (ii) | வாகனத்தைப் பயன்படுத்துகையில் ஓட்ட அட்டவணைகளைத் தவறின்றி நிரப்பிப் பேணாமையும் எரிபொருளை இணக்கம் செய்யாமையும் |
| | | (iii) | ஒவ்வொரு வாகனமும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, பெறுமதி, பழுதுபார்த்தல் போன்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாமை. |
| | | (iv) | வாகனங்களது மைலோமீட்டர்களைச் செயற்படுமாறு பேணாமை |
| | | (v) | வாகனம் பயணஞ் செய்த தூரம், பயன்படுத்திய எரிபொருளின் அளவு, பயணத்திற்கான அங்கீகாரம் போன்றன தவறின்றிக் குறிப்பிடப்படாமை. |
| | | (vi) | வாகனம் வழங்கப்படுகையில் முறையான அங்கீகாரம் வழங்கப்பட்டிராமை. |
| | | (vii) | எரிபொருள் தாங்கிச் சுற்றோட்டம் முறையாக சான்றுறுதிப்படுத்தப்படாமை |
| | | (viii) | எரிபொருளை அறவிடுவதற்குத் தவறற்ற அளவு கோல்களைப் பயன்படுத்தாமை. |
| | | (ix) | எரிபொருள் குறைவு மற்றும் மிகை தொடர்பான கட்டுப்பாடு நலிவடைந்தமை. |